செ.வெ.எண்: 08 நாள்: 06.01.2020

**திருவையாறு சத்குரு தியாகராஜர் ஆராதனை நிகழ்ச்சிக்கு மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதி அவர்களின் வருகையை முன்னிட்டு மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சத்குரு தியாகராஜர் ஆராதனை நிகழ்ச்சிக்கு மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதி அவர்கள் வருகை தரவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.

திருவையாறு சத்குரு தியாகராஜர் ஆராதனை நிகழ்ச்சிக்கு மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதி திரு.வெங்கையா நாயுடு அவர்கள் வருகை தரவுள்ளதையொட்டி, அங்கு ஆய்வுசெய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்பு முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளுதல், தடுப்புக் கட்டைகள் அமைத்தல், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு போதுமான இடவசதி செய்து தருதல், வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்துதல், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, தடையில்லா மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் துணை ஜனாதிபதி வருகை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.எஸ்.மகேஸ்வரன் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.